எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# NEWREC

12 நவம்பர் 2017
பொது காலம்
32ம் ஞாயிறு



# சமயங்களுகிடையாலான கலந்துரையாடலில் ஏன் ஈடுபடவேண்டும்?





## சமய வேறுபாடுகள்

சமயங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டது என்ற கருத்து, சமயங்களுகிடையிலான கலந்துரையாடலை ஊக்குவிக்க முக்கிய காரணமாகும். அவ்வேறுபாடுகள் மேலெழுந்த வாரியாக காணப்பட்டாலும், அவை முற்றிலும் உண்மையானவை. ஆகவே அவைகளை நாம் புரக்கணிக்க முடியாது. உண்மையும், வேறுபாடுகளும், நாம் மனம் திறந்து அவ்வுண்மை மற்ற சமயங்களிலும் உண்மை இருப்பதை கண்டுணர்ந்து உறுதிப்படுத்த திறந்த மனப்பான்மை தேவைப்படுகிறது, சொல்லில் அடக்க இயலா, புதிரான உன்னத முடிவில்லாத உண்மையை அனைத்து சமய எல்லையையும் ஊடுருவியுள்ளது. அதே வேளையில் ஒவ்வொன்றுக்குள்ளும் உள்ளது. பிற சமயங்களைப் பற்றி தெரிந்துகொள்ளும் போதுதான் ஒருவர் உன்னத உண்மைதனை தனதுறிமையாக கொள்ள முடியாததால், பன்மை சமயங்களின். கலந்துரையாடல் மிகவும் முக்கியமாகிறது. கலந்துரையாடலின் உண்மையப்பற்றி தெரிந்துகொண்டாலும் அறிந்துகொண்டாலும் ஒரு வரம்பிற்கு உட்பட்டிருக்கும் ஒன்றை மட்டும் அறிந்தவன் எதையுமே அறியாதவன் என்று மாக்ஸ் முல்லர் (max) கூறுகிறார்.

## இணைக்கும் வேறுபாடுகள்

சமயங்களுகிடையிலான வேறுபாடுகள் சமய நம்பிக்கையாளர்களை, இணைக்கவோ பிரிக்கவோ முடியும். மற்ற சமய நம்பிக்கையாளர்களை, பழக்கங்களையும், சிறுமைப்படுத்தி, கண்டனம் செய்தால் சுயமாக பிரிவினையை ஏற்படுத்திவிடலாம். மாறாக வேறுபாடுகள் இணைப்பது மனச்சான்றுக்கு கட்டுப்பட்டது. இவ்வாரானவர்கள் சமய வேறுபாடுகள் பிரிப்பதைவிட இணைப்பதென திடமான நம்பிக்கையுடயவர்கள். இவ்வகையான இணைக்கும் செயலுக்கு கலந்துரையாடல் ஒரு வழியாகும். உண்மையில் கலந்துரையாடலின் வாயிலாக, இவ்வேறுபாடுகள் வெளிப்படையில் காண்பது போல, அடிப்படையின் வேறுபாடுகளே அல்ல என்பதனை நாம் அறிய முடியும். ஆக கலந்துரையாடலின் வேலை பகிரப்பட்ட பொது உண்மைதனை உற்று நோக்க இணைய முடியாதலைகளுக்கிடையே ஒரு பாலமாக இருப்பதுதான் சமயவாதிகள் தனித்திருக்கும் தன்மையை உணர்ந்து, ஒன்றுகூடி இணைந்து செயல்பட கலந்துரையாடல் ஊக்கு விக்கிறது. பல நூற்றாண்டுகளாக, தனிமைப்பட்டு குறுகிய வட்டத்திற்கு உட்பட்டு, குறுகிய மனப்பான்மையுடன் மாறுபட்ட சமய கலச்சாரங்களை கொண்ட வெவ்வேறு சமயங்களுக்கு இது கண்டிப்பாக புதிதாகவே தோன்றும்.

## உலகினில் துன்புறுதல்

சமயங்கள் செழித்தாலும் உலகம் துன்பங்கள் நிறைந்ததாகவே உள்ளது. இயற்கை மற்றும் மனித துன்பங்கள் மற்றும் தனிமனித துன்பத்தைப்போல் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது. அடக்குமுறை செயல்கள் தீய எண்ணம்,பேராசை, அவமதிக்கும் போக்கு மற்றும் எதிர்மறை சிந்தனைகள் இல்லாவிட்டால் துன்பங்களை இடம் பெராமலிருக்கும். அனைத்து சமயங்களும் துன்பங்களை குறைக்கவே நோக்கமாக கொண்டுள்ளன இருந்த போதும் துன்பங்கள் அதிகரித்துகொண்டே இருப்பதானது, சமயங்கள் இக்கோணத்தில் வெற்றியடையவில்லை என்றே தோன்றுகிறது. மீட்டேடுக்கும் வகையில், ஒவ்வொரு சமயமும் முழுமனித வளர்ச்சியையும், இயற்கையின் வளர்ச்சிதனையும் ஊக்குவித்து, துன்பத்தினை குறைக்க முயல்கின்றன. ஆயினும் உலக பிரச்சணையை தனிஒரு சமயம் மட்டும் தீர்க்க முடியாத அளவுக்கு விஸ்பருபம் எடுத்துள்ளது. ஆக அனைத்து சமயங்களின் ஒத்துழைப்பும், பங்கெடுப்பும் அத்தியாவசமாகிறது. ஒன்றப்பட்டு செயல் படும் போக்கு கையாடப்பட வேண்டிய ஒரு தேர்வல்ல, ஆனால் ஒருவரின் நம்பிக்கைக்கு அதமிக அவசியமானதாகும். +

INTERNAL CIRCULATION ONLY
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



## மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரூ கூய்

*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

**எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்**

*2017 நவம்பர் (கார்த்திகை) மாதத்தின் கருப்பொருள்:*

**வேறுபட்ட கலாச்சாரங்கள் மற்றும் சமயங்களை ஈடுபடுத்துதல்**

# மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்

**( 1848 – 2018 )**

**பங்கு அலுவலக நேரம்:**

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** பொதுக்காலம் (ஆண்டு ஒன்று) 32ஆம் ஞாயிறு **சனி 11-11-2017 ஞாயிறு 19-11-2017**

சா.ஞா 6: 12-16 தி.பா 62: 2abc, 2d – 4, 5-6, 7-8 1 தீமோ 4: 13-18 (அல்லது 13-14) மத் 25: 1-13

**என் இறைவா ! என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது. ( தி.பா 62 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 11 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. ஹிலாரி 2) | **மாலை 7.00 மணிக்கு குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான திருருமுழுக்கு** |
| ஞாயிறு | 12 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம | திருப்பலி (தமிழ்) ( பு. மரியா )<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு. ஜோசப் சி)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| துங்கள் | 13 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 14 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 15 | காலை திருப்பலி நடைபெறாது | | **குருக்களின் மாதாந்திர தியானம்: APC, KL** |
| வியா | 16 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 17 | 6.45 கா | திருப்பலி | *மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) – அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் - காடோங்* |

**பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு : ( ஆண்டு ஒன்று)**

நீ.மொ 31: 10-13, 19-20, 30-31 தி.பா 127: 1-2, 3, 4-5 1 தெச 5: 1-6 மத் 25: 14-30 (அல்லது 14-15, 19-21)

**ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழியில் நடப்போர் பேறுபெற்றோர் ! ( தி.பா 127 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 18 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. பசில்) | |
| ஞாயிறு | 19 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) ( பு. மரியா )<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு. அம்புரோஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்கள் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2017 நவம்பர் (கார்த்திகை) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1. **ஆலய காணிக்கை**
   - i. 4 / 5 நவம்பர் ரிம: 9,221.30
   - ii. அனைத்து புனிதர்கள் நாள் ரி.ம. 3630.95 தித்தி ரி.ம 53.00
   - iii. சமூக அக்கறைப் பணிக்குழு ரி.ம. 6153.25

   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!
2. **11, 12 நவம்பர்** இயற்கை பேரழிவு நிவாரண நிதிக்காக இரண்டாவது காணிக்கை எடுக்கப்படும்

   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!
3. **திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனைக்கு:**
   - i. திருவழிபாட்டு நாட்காட்டி 2018 (ஆ) : ரி.ம 6.00
   - ii. **வின்சென்ட் டி போல்**
     வின்சென்ட் டி போல் நாட்காட்டி 2018 : ரி.ம 12.00
     கிறிஸ்துமஸ் அட்டை (ஒரு பைக்கட்டினுள் 6) ரி.ம 7.00
     தொடர்பு: வின்செனட் டி போல் உறுப்பினா மற்றும் டொரீன்

- **நீங்கள் உங்கள் அடிப்படை திருச்சபை சமூகத்தைச் சேர்ந்தவரா? (அதிச)** நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள அதிச வோடு நீங்கள் பதிந்துகொள்ளுங்கள். அதிச என்பது அனைத்து மொழிகளையும் உள்ளடக்கிய ஒரு குடும்பம் - ஒரு சமூகம் . இதைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள். அல்லது திரு ஜோன் மெய்னார்ட் அவர்களை தொடர்புகொள்ளுங்கள் ( 016-665 6411 / 016-5033903)
- **புதன் கிழமை அ.தி.ச நாள்** எந்தவொரு ஒன்றுகூடல்களோ, செயற்பாடுகளோ இந்நாளில் செயற்படுத்த வேண்டாம்.
- **பொறுப்புணர்வோடு நடந்துகொள்வோம்** : ஆலய வளாகத்திலுள்ள வகுப்பறைகளில், வகுப்புகள் மற்றும் கூட்டங்கள் முடிந்தபின், மின்விளக்குகள், மின்விசிறி, குளிர்சாதனக் கருவிகள் போன்றவற்றை பயன்படுத்திய பின்னர் அணைத்துவிடவும். மேசை மற்றும் நாற்காலிகளைப் பயன்படுத்திய பின்னர் எடுத்த இடத்தில் மீண்டும் வைத்துவிடவும். எப்போதும் பயன்படுத்திய இடத்தை தூய்மையாக வைக்கும்படி நினைவுறுத்தப்படுகின்றீர்கள்

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம்:**
அ) சார்ல்ஸ் & சுசி 18/11/2017 காலை 11.00
ஆ) சிம்ப்சன் லியு & சுசி வோங் 18/11/2017 மாலை 3.30

- **புதுநன்மை மாணவர்களுக்கான முகாம் :** 11, 12 நவம்பர் 2017 (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் மினவுதல் மாதா சென்டரில் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்ளவிருக்கும் 82 மாணவர்களையும் செபத்தில் ஒப்புக்கொடுப்போம்.
  - 25-11-2017 (சனி): காலை 9.00 மணிக்கு அனைத்து புதநன்மை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். தொடர்ந்து ஒத்திகையும் இடம்பெறும்
  - 26-11-2017 (ஞாயிறு): புதுநன்மை அருளடையாளம் ஒவ்வொரு மொழி வாரியான திருப்பலிகளிலும் வழங்கப்படும்

  **மறைக்கல்வி மாணவர்களின் வருட இறுதி விடுமுறையை முன்னிட்டு நவம்பர் 26 முதல் டிசம்பர் 31 வரை மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது. மீண்டும் அடுத்த வருடம் 7–1–2018 (ஞாயிறு) மறைக்கல்வி மாணவர்களுக்கான பதிவுகள் நடைபெறும்.**
- **மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டு நிறைவை நோக்கிய பயணம்:** மறைக்கல்வி மாணவர்களின் கலாச்சாரப் படைப்பு: நவம்பர் 18, 2017(சனிக்கிழமை) மாலை 7.30 மணிக்கு: இடம்: மினவுதல் மாதா தேவாலய மண்டபம்: கருப்பொருள்: கலாச்சாரத்தில் ஒற்றுமை. அனைவரையும் வருகவென்று வரவேற்கிறோம்.
- **திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அறிவிப்பு : நவம்பர் 19, 2017 - உலக ஏழைகளின் ஞாயிறு.** அன்று நம்முடைய ஆலய வளாகத்தில் 500 பேருக்கு உணவு வழங்கப்படுகிறது. நேரம்: 2.30 - 4.30 வரை:

**உங்களால் உதவ முடியுமா ?**

a) அதிச /வட்டார பொறுப்பாளர்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் நவம்பர் 14 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்கவும்.
b) உதவிசெய்ய முன்வருபவர்கள் ஸ்டீபன் (0166110681) மற்றும் குழுவினரை மாதா கெபியின் முன் அல்லது ஆலய உணவு விடுதியில் ஞாயிறு திருப்பலியின் பின்னர் சந்திக்கவும்

- **பங்கின் பராமரிப்புக்கு நிதியுதவி எதிர்பார்க்கிறோம்:** பங்கு அளவில் செய்யப்படும் அனைத்து பராமரிப்பு செலவுகளுக்கும் உங்கள் நிதியுதவிகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் நன்கொடைகளை பணமாகவோ காசோலையாகவோ செலுத்தலாம். காசோலைகளை Church of Visitation என்று எழுதி ஆலய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்
  **குறிப்பு:** நன்கொடை வழங்குவோர் நீங்கள் வழங்கும் தொகைக்கு வரி விலக்குப் பெற பங்கு அலுவலகத்தை நாடவும்.
- **புனரமைப்பு வேலைகள் நடந்துகொண்டிருக்கிறது :**
  **ஆலய உணவு விடுதி** – வர்ணம் பூசுதல், சுத்திகரிப்பு, மின்னியல் பழுதுபார்த்தல்
  **சமயலறை பொருட்கள்** - சீரமைத்தல்
  **நாய்கள் பராமரிப்பு கூண்டு** – சுத்திகரித்தல், கதவுகள் சீரமைத்தல்
  **ஜோன் போல் 2 இல்லம்** (2 இல்லங்கள்) விரைவில் சீரமைக்கப்பட்டுவிடும்
- **ஆலயத்தை சுத்தப்படுத்துதல்** : ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் காலை 8.00 – காலை 10.00 மணி வரை. ஆண்டவருடைய இல்லத்தை வாராந்தம் சுத்தப்படுத்துவதற்கு உதவிசெய்ய ஆர்வமுள்ளவர்களை வரவேற்கிறோம்.
- **தமிழ் மறைக்கல்வி** வகுப்புகளில் பயிற்றுவிக்க மறைக்கல்வி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் சூசை செல்வநாதன் அவர்களை தெடர்பு கொள்ளவும். 012 903 6581

- **குருக்களின் மாதாந்திர தியானம்:** 14 & 15 நவம்பர் APC, KL
- **அதிச ஒருங்கிணைப்பாளர்களின் குழு கூட்டம்** (BECCOT) நவம்பர் 22,2017 மாலை 7.45